# கரூரில் கடல் புகுந்ததோ!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரக் கூட்டத்தில் ஆர்ப்பரித்த மக்கள் பாரீர்!



## என்.டி.ஏ. கூட்டணியைப் புறக்கணிப்பதுதான் தமிழ்நாட்டுக்கு நல்லது!

# தி.மு.கழகக் கூட்டணியின் வெற்றி நூறு சதவிகிதம் உறுதி!

## கரூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி பேருரை!

கரூர்,ஏப். 3 –

**என்.டி.ஏ. கூட்டணியை புறக்கணிப்பது தான் தமிழ்நாட்டுக்கு நல்லது. தி.மு.கழக கூட்டணி நூறு சதவிகிதம் வெற்றி உறுதி என கரூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி பேருரை யாற்றினார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01-04-2026) மாலை கரூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசிய உரை வருமாறு:**

காலையில் தீரர்கள் கோட்டமான திருச்சியில் பரப்புரையை முடித்துவிட்டு, கரூருக்கு வருகை தந்து, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கரூர் என்றால் கழக ஊர். செப்டம்பர் மாதம் நடந்த முப்பெரும் விழா எழுச்சியை மீண்டும் இன்று நான் பார்க்கிறேன். ஏன், அதைவிடப் பன்மடங்கு கூடியிருக்கும் எழுச்சியையும் நான் காண்கிறேன். அடுத்த மாதத்தில் திராவிட மாடல் 2.0 வெற்றி விழாவிற்கு தயாரா? இதோ உங்களைப் போன்றே தயாராக நான்கு வேட்பாளர்கள் நிற்கிறார்கள்.

### 4 வேட்பாளர்களையும் அமோக வெற்றி பெறச் செய்வீர்!

முதலில் அரவக்குறிச்சி தொகுதி, நமது வேட்பாளர் மொஞ்சனூர் இளங்கோ அவர்கள். அரவக்குறிச்சியில் கடந்த 5 ஆண்டு காலமாக அவர் ஆற்றிய பணி மறக்க முடியாத ஒன்று. சென்ற முறை போன்றே, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும். அதற்கு அரவக்குறிச்சி மக்கள் உங்கள் வாக்குளை உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வழங்க வேண்டும்.

அடுத்து கிருஷ்ணராயபுரம் தொகுதி, நமது வெற்றி வேட்பாளர் சி.கே. ராஜா அவர்கள். மாவட்ட இளைஞரணியின் துணை அமைப்பாளராக கழகப் பணியைச் சிறப்பாகச் செய்யக் கூடியவர். இப்போது கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்களுக்காகப் பணியாற்ற உங்கள் ஆதரவைக் கோரி நிற்கும் அவருக்கு உதய சூரியன் சின்னத்தில் நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்க வேண்டும்.

அடுத்து குளித்தலை தொகுதி, நமது வெற்றி வேட்பாளர் சூரியனூர் சந்திரன் அவர்கள். ஒன்றியச் செயலாளராக தன்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்யக் கூடியவர். தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் உதயசூரியன் சின்னத்தில் நின்று வென்ற தொகுதி. இந்த முறை உதயசூரியன் சின்னத்தில் சூரியனூர் சந்திரன் நிற்கிறார். அவருக்குக் குளித்தலை தொகுதி மக்கள் உங்கள் பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் வழங்க வேண்டும்.

அடுத்து கரூர் தொகுதி, நம்முடைய வெற்றி வேட்பாளர் ஆசி.எம். தியாகராஜன் அவர்கள். உப்பிடமங்கலம் நுண் நீரேற்று விவசாயிகள் சங்கத்தினரின் தலைவராகப் பொறுப்பேற்று விவசாயிகளுக்காக அரும்பணியாற்றியவர். இப்போது நம்முடைய செந்தில் பாலாஜி அவர்கள் செய்த பணிகளை அவர் தொடரப் போகிறார். கடந்த முறை செந்தில் பாலாஜி அவர்கள் பெற்ற வெற்றி போன்றே ஆசி.எம். தியாகராஜன் அவர்களுக்கும் உங்கள் வெற்றியை வழங்க உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை நீங்கள் வழங்க வேண்டும்.



கழகத் தலைவரும் –முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.4.2026) கரூரில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில், அரவக்குறிச்சி தொகுதி கழக வேட்பாளர் மொஞ்சனூர் ஆர். இளங்கோ, கரூர் தொகுதி கழக வேட்பாளர் ஆசி.எம். தியாகராஜன், கிருஷ்ணராயபுரம் தொகுதி கழக வேட்பாளர் சி.கே. ராஜா, குளித்தலை தொகுதி கழக வேட்பாளர் சூரியனூர் அ. சந்திரன் ஆகியோரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருண் நேரு, செல்வி ஜோதிமணி, கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி. செந்தில்பாலாஜி, சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கரூர் மாவட்ட கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

> **“இந்த திராவிட மாடல் ஆட்சியில், சாதிக் கலவரம் இல்லை! மதக் கலவரம் இல்லை! கும்பல் வன்முறை இல்லை! தொடர் வன்முறைகள் இல்லை! தமிழ்நாடு அமைதியாக இருக்கிறது! மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்! இதைப் பார்த்து அ.தி.மு.க.வும் – பா.ஜ.க.வும்-தான் டென்ஷனாக இருக்கிறார்கள்! ஏன் என்றால், இந்த அமைதியை கெடுக்க அவர்கள் பரப்பும் பொய்ச் செய்திகள் அனைத்தும் புஸ்வாணமாக ஆகிவிட்டது! அவர்களின் சதித் திட்டங்கள் அனைத்தும் சந்தி சிரித்துவிட்டது! அவர்களின் அவதூறு பிரச்சாரங்கள் அனைத்தும் தவிடுபொடியாகிவிட்டது! அனைத்திற்கும் காரணம் இந்த தனிப்பட்ட ஸ்டாலின் அல்ல; இந்த ஸ்டாலினுக்குப் பக்கபலமாக இருக்கும் நீங்கள்தான் அதற்குக் காரணம்!”**

### கரூரைப் பற்றி எனக்கு கவலையில்லை, வெற்றியை செந்தில் பாலாஜி உறுதி செய்து விட்டார்!

இவர்கள் நான்கு பேரையும் உங்களின் பிரதிநிதிகளாக – உங்களின் உரிமைக்குரலாக சட்டமன்றத்திற்கு அனுப்பி வையுங்கள் என்று கேட்கத்தான் உங்களால் உருவாக்கப்பட்ட இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வந்திருக்கிறேன். இவர்களுக்கு வெற்றி உறுதியா? நன்றி! வெற்றி உறுதியாகிவிட்டது. வேட்பாளர்கள் உட்காரலாம்.

கரூரைப் பொறுத்தவரைக்கும் எனக்கு எந்தக் கவலையும் இல்லை! ஏன் என்று உங்களுக்கே தெரியும். என்னுடைய இனிய சகோதரர் செந்தில் பாலாஜி அவர்களுடைய மாவட்டம் இது. நிச்சயம் நூறு சதவீதம் வெற்றி உறுதி! கரூரில் கழகக் கூட்டணியின் வெற்றியை அவர் எப்போதோ உறுதி செய்த காரணத்தினால்தான், கோவை மாவட்டத்தில் நிற்கச் சொல்லி அவருக்குப் பொறுப்பு கொடுத்திருக்கிறேன். நீங்கள் யாரும் கவலைப்படாதீர்கள். அவர் புகுந்த வீடுதான் கோவை. அவர் பிறந்த கரூரை என்றும் மறக்கமாட்டார். அடுமட்டுமல்ல, பல சோதனைகளைத் தாண்டி, சாதனை படைப்பவர் செந்தில் பாலாஜி அவர்கள். இந்த முறை கரூர், கோவை இரண்டுமே நம் வசம்தான்! ஏன், தமிழ்நாடு மொத்தமும் நாம்தான்! மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி 200 தொகுதிகளுக்குக் குறையாத வெற்றி பெறப்போகிறது! சாதிக்க நான் ரெடி... நீங்கள் ரெடியா?

### ஐந்து ஆண்டுகளில் ஏராளமான திட்டங்கள்!

பத்தாண்டு காலமாக, தமிழ்நாட்டை இருளுக்குள் தள்ளி, வளர்ச்சியை நாசப்படுத்தி, உரிமைகளை அடகு வைத்த அ.தி.மு.க. ஆட்சியை நாம் அகற்றி, 2021-இல் புதிய விடியலாக திராவிட மாடல் ஆட்சியை அமைத்தோம். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு மட்டுமல்ல, எந்தவொரு மாநில அரசும் இந்தளவிற்குச் சாதனைகளைச் செய்ய முடியாது என்று கம்பீரமாக நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் அளவிற்கு, ஏராளமான திட்டங்களை திராவிட மாடல் ஆட்சியில் செய்திருக்கிறோம்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் இந்தக் கரூருக்கு மட்டும் ஐந்தாயிரம் கோடி ரூபாய் அளவிற்கான திட்டங்களைச் செய்திருக்கிறோம். நேரத்தின் அருமை கருதி, அதில் முக்கியமான சிலவற்றை மட்டும் சுருக்கமாகத் தலைப்புச் செய்திகளாக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### கரூருக்கு கழக அரசு செய்துள்ள சாதனைகள்!

**கரூர் மாவட்டம், நெரூரையும் – திருச்சி மாவட்டம், உன்னியூரையும் இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே 101 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டியிருக்கிறோம்!**

**கரூர் தொகுதி மக்களின் 25 ஆண்டுகாலக் கோரிக்கையான புதிய பேருந்து நிலையத்தை 40 கோடி ரூபாய் மதிப்பில் அமைத்திருக்கிறோம்.**

**38 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மினி டைடல் பார்க்கிற்கு அடிக்கல் நாட்டிப் பணிகளை தொடங்கியிருக்கிறோம்!**

**கரூர் – கோவை தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கம்,**

**கரூர் - திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் மாவட்ட மைய நூலகத்திற்குப் புதிய கட்டடம்,**

**அரவக்குறிச்சியில் புதிய அரசு கலைக் கல்லூரி, புதிய வேளாண்மைக் கல்லூரி,**

**குளித்தலையில் புதிய அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை,**

**அரசு தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடம்,**

**கரூர் – ஈரோடு சாலை விரிவாக்கம்,**

**கிருஷ்ணராயபுரத்தில் முருங்கைப் பூங்கா அமைப்பதற்கான முதற்கட்ட பணிகள் தொடக்கம்,**

**கரூர் மாநகராட்சியில் புதிய நீச்சல் குளம்,**

**கிருஷ்ணராயபுரத்தில் சிப்காட் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது! இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்! அதுமட்டுமல்ல, இன்னும் நிறைய பணிகள் வரப் போகிறது.**

**கரூர் மாவட்டத்தில் திருக்கோயில்கள் நிலம் சம்பந்தமாகச் சட்டப் பிரச்சினைகள் இருக்கிறது. இதற்காக நம்முடைய செந்தில் பாலாஜி அவர்கள் இந்தப் பகுதி மக்களோடு சேர்ந்து பல முயற்சிகளை எடுத்து வருகிறார். இதற்காக அமைக்கப்பட்டிருக்கும் குழு வழங்க இருக்கும் அறிக்கையைக் கொண்டு நிச்சயமாக முழுத் தீர்வு காணப்படும்.**

### தமிழ்நாட்டின் எதிர்காலத்தை வடிவமைத்திட திட்டங்கள்!

திராவிட மாடல் ஆட்சியில் நடந்து கொண்டிருக்கும் உட்கட்டமைப்பு வளர்ச்சிகளை மக்களான நீங்களே அனைத்து இடங்களிலும் பார்க்கிறீர்கள். இந்த வளர்ச்சியைச் சாத்தியப் படுத்தியிருக்கும் தெம்போடுதான் தமிழ்நாட்டிற்கான எதிர்காலத்தை வடிவமைக்கும் தொலைநோக்குப் பார்வையோடுதான் உங்கள் முன்னால் உரிமையுடன் நான் வாக்கு கேட்க வந்திருக்கிறேன்!

முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே, மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணத்திற்குக் கையெழுத்திட்டவன் தான், உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கும் இந்த ஸ்டாலின்! இங்கு இருக்கும் மகளிரைக் கேட்கிறேன்... நீங்கள் அனைவரும் இன்றைக்கு வரைக்கும் விடியல் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்களா?

மகளிர் உரிமைத்தொகை கொடுப்பேன் என்று சொன்னேன். சொன்னது போன்று உங்கள் வங்கிக் கணக்கிற்கு மாதாமாதம் வந்துகொண்டிருக்கிறதா?

தொடர்ச்சி 9 – ஆம் பக்கம்